Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

MONDAY, MAY 19, 2025

திங்கட்கிழமை 19, மே 2025 | ஒளி: 10 கதிர்: 241 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



# முள்ளிவாய்க்கால் முற்றம்
# கண்ணீர் மழையில் நனைந்தது

■ புகஜிந்தன்

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற போரின் இறுதியில் நிகழ்ந்த மனிதப் பேரவலத்தினை நினைவுகூர்ந்து வருடம் தோறும் மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்படுகின்றது.

இம்முறையும் 16ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பில் பல்வேறு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வானது முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மிகவும் உணர்வுப்பூர்வமாக ஞாயிற்றுக்கிழமை (18) நடைபெற்றது.

முதலில் முள்ளிவாய்க்கால் கொள்கை பிரகடனம் வாசிக்கப்பட்டது. பின்னர் அக வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, காலை 10.31 மணியளவில் பொதுச் சுடரினை ஏற்றிவைக்க, முள்ளிவாய்க்கால் கீதங்கள் இசைக்க சமநேரத்தில் ஏனைய சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

உயிர்நீத்தவர்களின் உறவுகள் கதறியழ, கண்ணீர் மழையில் முள்ளிவாய்க்கால் முற்றம் நனைந்தது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தில் முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிககப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயமடைந்திருந்தனர்.

தொடர்ச்சி P2



## இன்று யுத்த வெற்றிநாள்...

இந்தநாட்டில் 30 ஆண்டுகால விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இன்றுடன் (18 ஆம் திகதி) 16 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

அதுவரை நீடித்த கொடூரமான போர், 2009 மே 18அன்று நந்திக்கடலில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டதோடு, முடிவுக்கு வந்தது.

இதனை நினைவுகூர்ந்து, பத்தரமுல்லையில் உள்ள இராணுவ வீரர்களின் நினைவுச் சின்னத்துக்கு முன்பாக, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையில், யுத்த வெற்றிநாள், திங்கட்கிழமை (18) மாலை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

## மஹிந்தவின் தனி விழாவுக்கு அனுமதி மறுப்பு

போர் வெற்றியின் 16ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் திங்கட்கிழமை (19) தேசிய போர் வீரர்களின் நினைவு விழாவில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) கேட்டுக்கொள்கிறது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஹலோலுவ பயணித்த கார் மீது துப்பாக்கிச் சூடு



தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மக்கள் தொடர்பு பணிப்பாளரும், முக்கிய அரசியல் ஆர்வலராகவும் பணியாற்றிய துசித ஹலோலுவ பயணித்த கார் மீது நாரஹேன்பிட்ட பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக நாரஹேன்பிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## NMRA தலைமை நிர்வாக அதிகாரி இராஜினாமா

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் (NMRA) தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் சவீன் செமகே , தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி சனிக்கிழமை (17) அன்று உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்தார்.

தொடர்ச்சி P2

## மண்சரிவு எச்சரிக்கை

நாட்டின் சில பகுதிகளில் கடும் மழை தொடர்ந்து பெய்து வருவதால், ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையை ஞாயிற்றுக்கிழமை(18) அன்று தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு(NBRO) விடுத்துள்ளது.

அதன்படி,கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி,கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





## வெள்ளவத்தை நினைவேந்தலை குழப்ப முயன்ற குழு

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப் போரின்போது, கொல்லப்பட்ட தமிழ் பொதுமக்களை நினைவுகூரும் வகையில் வெள்ளவத்தையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொது ஒன்றுகூடல், ஞாயிற்றுக்கிழமை(18) முன்னெடுக்கப்பட்டது.

அந்த ஒன்றுகூடலை, சிறிய குழுவினர் குழப்புவதற்கு முயன்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## தென்னக்கோன் இன்று ஆஜர்



கட்டாய விடுமுறையில் இருக்கும் பொலிஸ் மா அதிபரின் ( ஐஜிபி) தவறான நடத்தை மற்றும் கடுமையான அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து அறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, முதற்கட்ட விசாரணைகளைத் தொடர்ந்து அதன் விசாரணையைத் தொடங்கும். பொலிஸ் மா அதிபர் டி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னகோன் இன்று திங்கட்கிழமை 19ஆம் திகதி முதன்முறையாக விசாரணைக் குழுவின் முன் ஆஜராவார்.

தொடர்ச்சி P2



2020 முதல் 2024 வரை

## ரயில்களில் மோதி 53 யானைகள் மரணம்

கடந்த 2020 முதல் 2024 வரை ரயில்களில் மோதி 53 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகவும், 17 யானைகள் காயமடைந்துள்ளதாகவும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 15 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பு அறுவடை பாதிப்பு



■ ரஸீன் ரஸ்மின்

திடீரென பெய்த கடும் மழை காரணமாக சுமார் 15 ஆயிரம் மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான உப்பு அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## உறுப்பினர்களை நியமிப்பத்தில் தாமதம்

நடத்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அடிப்படையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில், அரசியல் கட்சிகளுக்குள் எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகள் காரணமாக, தேர்தல் ஆணைக்குழுவில் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்






# கண்ணீர் மழையில் நனைந்தது

இதனால் ஏற்பட்ட இழப்புகள் விபரிக்க முடியாத சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த இறுதி யுத்தத்தின் போது, 90 ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர்.

9 ஆயிரம் சிறுவர்கள் அநாதரவாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டனர். படையினரிடம் சரணடைந்தவர்கள், படையினரால் கைது செய்யப்பட்டவர்கள், படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் என்று காணாமல் போனோரது சோக வரலாறுகள் இன்றும் தொடர்ந்து வருகிறது. இவ்வாறு முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட இழப்புகளை நினைவு கூர்ந்து

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வருடந்தோறும் மே மாதம் 18ஆம் திகதி நடத்தப்பட்டு வருகின்றது. மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை

முள்ளிவாய்க்கால் வாரம் நினைவு கூரப்பட்டது. 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இம்முறையும் முள்ளிவாய்க்கால் வாரம் கடந்த 6 தினங்களாக அனுஷ்டிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திலும் வடக்கு, கிழக்கில் பல்வேறு இடங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஞாயிற்றுக்கிழமை (18) அனுஷ்டிக்கப்படுகின்றது. முள்ளிவாய்க்காலில் மக்கள்பட்ட அவலத்தை வெளிக்காட்டும் வகையில் கடந்த ஒரு வார காலமாக வடக்கு, கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தவின் தனி விழாவுக்கு அனுமதி மறுப்பு

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்படுவதாகவும், அது தங்கள் உயிர்களை தியாகம் செய்த போர் வீரர்களின் பெயரில் ஜனாதிபதி செய்யும் ஒரு பெரிய தவறு என்றும் ஞாயிற்றுக்கிழமை (18) அன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு கட்சியாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஒரு கட்சியாக, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை அரச தலைவராகவும், பிரதமராக ஹரிணி அமரசூரியவை தேசிய போர் வீரர்களின் நினைவு விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று அவர் கூறினார்.

அரச தலைவர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பதை அறிந்தவுடன், போரை முடிவுக்குக் கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பங்கேற்புடன் தனி விழாவை நடத்த அனுமதி வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்தது, அந்தக் கோரிக்கை அமைச்சினால் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும், SLPP, ஒரு தேசிய கடமையாக, மே 20 அன்று மாலை 5.00 மணிக்கு போர் நினைவுச்சின்னத்திற்கு அருகில் ஒரு போர்வீரர் நினைவேந்தலை நடத்த முடிவு செய்துள்ளது. என்றார்.

படைத் தளபதி என்ற முறையில் ஜனாதிபதியின் தலைமையில் இந்த விழா நடைபெறும் என்று அதிகாரசபையின் தலைவர் பிரிகேடியர் செனரத் கோஹோன (ஓய்வு) தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த 16ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் தேசிய போர்வீரர் தினம், வெற்றி நாள் என்றும் அழைக்கப்படுகிறது, இது நாளை மாலை 4.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் உள்ள தேசிய போர்வீரர் நினைவுச்சின்னத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பாதுகாப்பு துணை அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர (ஓய்வு), பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கடற்படை அட்மிரல் மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள்; மற்றும் போரின் இறுதிக் கட்டத்தில் முப்படைகளையும் வழிநடத்திய விமானப்படை மார்ஷல் ரோஷன் குணதிலக ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹலோலுவ பயணித்த கார் மீது துப்பாக்கிச் சூடு

நாரஹேன்பிட்ட கிரி மண்டல மாவத்தையில் உள்ள தனியார் மருத்துவமனையின் முன்பாக இந்த துப்பாக்கிச் சூடு, சனிக்கிழமை (17) இரவு நடந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் ஹல்லோலுவாவுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றாலும், காரில் பயணித்த அவரது வழக்கறிஞர்களில் ஒருவர் எனக் கூறப்படும் ஒருவருக்கு லேசான காயம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துசில் ஹலோலுவின் காரைத் துரத்திச் சென்ற இரண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் வானத்தை நோக்கிச் சுட்டதாகவும், பின்னர் காரை நிறுத்தி கண்ணாடியின் மீது சுட்டதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், காரிலிருந்த சில ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

ஜனாதிபதி குறித்து துசித ஹலோலுவ வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து காரணமாக சமீபத்தில் சர்ச்சைக்குரியவராக மாறினார், மேலும் அவர் விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 15 ஆயிரம் மெட்ரிக் தொன்...

தற்போது நாடு முழுவதும் நிலவிவரும் கடுமையான உப்பு பற்றாக்குறைக்கு, உப்பு உற்பத்திக்கு தேவையான சூரிய ஒளி போதியளவு கிடைக்காததும் , தொடர்ச்சியாக மழை பெய்வதும் இதற்குரிய முக்கிய காரணம் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையின் மொத்த உப்பு உற்பத்தியில் புத்தளம் மாவட்டம் சுமார் 60 சதவீதம் பங்களிப்பை வழங்கி வருவதுடன், நல்ல வெயில் காலங்களில் சுமார் 100,000 மெட்ரிக் தொன்களுக்கும் அதிகமான உப்பு அறுவடை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தனியார் மற்றும் அரச உப்பு உற்பத்தியாளர்களின் தொடர்புடைய துறைகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், புத்தளம் மாவட்டத்தில், சிறுபோக பருவத்தில் உப்பு அதிக அறுவடைக்கு வழிவகுத்துள்ள நிலையில், சனிக்கிழமை (17) முதல் ஞாயிற்றுக்கிழமை(18) வரை தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை காரணமாக, புத்தளத்தில் உப்பு அறுவடை மீண்டும் தோல்வியடைந்துள்ளதாக உப்பு உற்பத்தியாளர்கள் கூறியுள்ளனர்.

இதனால், தாம் பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதிக கடன் சுமைகளோடு தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதாகவும் புத்தளம் உப்பு உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## மண்சரிவு எச்சரிக்கை

இந்தப்பகுதிகளில் வசிப்பவர்கள் மண்சரிவு, பாறைசரிவு, வெட்டு சரிவு மற்றும் தரை சரிவு போன்ற சாத்தியக்கூறுகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

## உறுப்பினர்களை...

இதன் விளைவாக, உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவது மேலும் தாமதமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில், அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களும் ஒரு வாரத்திற்குள் தங்கள் பெயர்ப் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் குறித்த வர்த்தமானி, தேர்தல் ஆணைக்குழு அனைத்துப் பட்டியல்களையும் பெற்ற பின்னரே வெளியிடப்படும்.

கொழும்பு மாநகர சபையின் மேயர் மற்றும் பிரதி மேயருக்கான வாக்கெடுப்பை அடுத்த ஜூன் மாதம் 2ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்னக்கோன் இன்று ஆஜர்

தேசபந்து தென்னகோன் செய்ததாகக் கூறப்படும் தவறான நடத்தை மற்றும் கடுமையான அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து அறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, கடந்த சில வாரங்களாக பாராளுமன்ற வளாகத்தில் கூடி முதற்கட்ட விசாரணைகளை நடத்திய பின்னர், இன்று 19ஆம் திகதி முதல் தனது விசாரணையைத் தொடங்க உள்ளது.

அதன்படி, குழு சமீபத்தில் ஐஜிபி தேசபந்து தென்னகோனுக்கு 19ஆம் திகதி குழுவின் முன் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பியது, அதன்படி, விசாரணை நடத்தப்படுவதற்காக அன்றைய தினம் அவர் முதல் முறையாக குழுவின் முன் ஆஜராக உள்ளார்.

இந்தக் குழு பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (15) கூடி, விசாரணை நடத்துவது குறித்து மேலும் விவாதித்தது. விசாரணைக் குழு 19ஆம் திகதி (இன்று) பிற்பகல் 2.00 மணிக்கு பாராளுமன்றத்தின் குழு அறை எண் 8இல் கூடவுள்ளது.

## உலக உயர் இரத்த அழுத்த தினம்

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் (மே 17) உலக உயர் குருதி அழுத்தத் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவணியும் உணவுக் கண்காட்சியும் கருத்தரங்கும் பிராந்திய தொற்றா நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் சனிக்கிழமை (17) இடம் பெற்றது.

"உங்கள் இரத்த அழுத்தத்தைத் துல்லியமாக அளவீட்டு, அதனைக் கட்டுப்படுத்தி, நீண்ட நாட்கள் உயிர் வாழுங்கள் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விழிப்புணர்வு நடைபவணி நிகழ்வும் இடம்பெற்றதோடு, இந்நடைபவணியில் "இலங்கையில் 83 சதவீதமான உயிரிழப்பு தொற்று நோய்களினால் ஏற்படுகின்றது", "உயிரிழப்பை ஏற்படுத்தும் தொற்றா நோய்களில் மாரடைப்பு, பக்கவாதம் என்பன பிரதான காரணியாகும்", "இலங்கையில் மூன்றில் ஒருவர் உடல் அசைவு அற்றவர்களாக உள்ளனர்", "உடற்பயிற்சி உயர் குருதி அமுக்கத்தைக் கட்டுப்படுத்த உதவும்", "இலங்கையில் 70 சதவீதமானவர்கள் அவசியமான அளவு மரக்கறி, பழங்கள் உட்கொள்வதில்லை" என்ற சுலோகங்களை ஏந்தியவாறு பொதுமக்களும், தாதியர்களும் பிரதான வீதி வழியாக விழிப்புணர்வூட்டும் முகமாக உலா வந்தனர். அத்துடன் உயர் குருதி அழுத்தத்தால் பாதிப்புக்குள்ளானவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் உணவுக் கண்காட்சியாகக் காண்பிக்கப்பட்டு, அவ்வுணவுப் பண்டங்கள் சம்பந்தமாகப் போதியளவு விளக்கங்களும் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பரினால் வழங்கப்பட்டன.

## ரயில்களில் மோதி 53 யானைகள் மரணம்

காட்டு யானை விபத்துகளைக் குறைப்பதற்காக 2018 அக்டோபர் 11 முதல் 15 வரை ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டாலும், காட்டு யானைகள் ரயில்களுடன் மோதும் இடங்கள் மற்றும் ரயில் பாதையில் காட்டு யானைகள் நடமாடும் இடங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டாலும், காட்டு யானைகள் ரயில்களுடன் மோதும் சம்பவங்கள் குறையவில்லை என்று குழு சுட்டிக்காட்டியது.

2018ஆம் ஆண்டு நிலைமை இப்போது மாறிவிட்டது என்றும், சமீபத்தில், தினமும் சுமார் 200 யானைகள் ரயில் தண்டவாளங்களில் சுற்றித் திரிவது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

குறுகிய கால தீர்வுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும், வனவிலங்குத் துறையுடன் கலந்துரையாடல்கள் மூலம் நீண்டகால தீர்வுகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

ரயில்வே துறைக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் சொத்துக்கள் குறித்த தரவுகளைக் கொண்ட தகவல் அமைப்பைத் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

தகவல் அமைப்பைத் தயாரிப்பது குறித்த அறிக்கையை 2024 ஆகஸ்ட் 5க்குள் குழுவிடம் சமர்ப்பிக்கப் பரிந்துரைக்கப்பட்டதாகத் தணிக்கைத் துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். ஆனால், அது இன்னும் பெறப்படவில்லை என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். ரயில்வே துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், இந்த அறிக்கையை 3 மாதங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தனர்.

நடத்தப்பட்ட தணிக்கை மற்றும் மேலாண்மைக் குழுக் கூட்டங்களின் போதாமை குறித்தும் குழு கவனத்தை ஈர்த்தது. வருடத்திற்கு நான்கு தணிக்கை மற்றும் மேலாண்மை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டியிருந்தாலும், 2021 முதல் 2024 வரை அவை நடத்தப்படவில்லை என்பது தெரியவந்தது. அதன்படி, 2025 ஆம் ஆண்டுக்கு ஏற்கனவே ஒரு கூட்டம் நடத்தப்பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டு தேவையான 4 கூட்டங்களையும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

2022 முதல் 2024 வரை 27 தணிக்கை விசாரணைகளுக்குப் பதிலளிக்கப்படவில்லை என்பதும் தெரியவந்தது.

இந்த நோக்கத்திற்காகத் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால் இது நிகழ்ந்ததாக வந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இருப்பினும், எதிர்காலத்தில் தங்களால் இயன்றவரை இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

ரயில்வே துறையின் தற்போதைய செயல்திறன் குறித்தும் விவாதிக்கப்பட்டது, மேலும் ரயில்வே துறையில் 267 என்ஜின்கள் மற்றும் பவர் செட்கள் உள்ளன, அவற்றில் 90 40 ஆண்டுகளுக்கும் மேலானவை, 69 20 முதல் 30 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை, 62 10 முதல் 20 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை, 46 10 ஆண்டுகளுக்கும் குறைவானவை என்பது தெரியவந்தது.

ரயில்வே துறை நாட்டிற்கு அவசியமான ஒரு நிறுவனம் என்று குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். இருப்பினும், இந்த விடயம் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் எதிர்மறையான கருத்துக்கள் இருப்பதாகவும், இந்த சூழ்நிலையைத் தடுக்கவும் இந்த நிறுவனத்தை மேலும் திறம்படச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## வெள்ளவத்தை நினைவேந்தலை குழப்ப முயன்ற குழு



வெள்ளவத்தை- லெக்ஸாண்ட்ரா வீதிக்கு எதிரே உள்ள கடற்கரைக்கு அருகில் இந்த நிகழ்வு நடைபெற்றது, மோதலின் இறுதிக் கட்டத்தின் போது இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்களை நினைவுகூரும் வகையில் வெள்ளை மலர்களுடன் பங்கேற்பாளர்கள் கூடியிருந்தனர்.

மற்றொரு குழு ஒன்றுகூடலை சீர்குலைக்க முயன்றது. இதனால், அப்பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

சம்பவ இடத்தில் பொலிஸார் இருந்ததாகவும், போராட்டத்தில் ஈடுபட்ட குழுவை கலைக்க பொலிஸார் முயற்சிப்பதையும் நிகழ்நிலையில் சம்பவம் குறித்து பகிரப்பட்ட காணொளி காட்டுகிறது.

நிகழ்வை குழப்புவதற்கு முயற்சித்த குழுவினர், இலங்கையில் இராணுவம் பயங்கரவாதிகள் மீதே தாக்குதலை மேற்கொண்டது, இலங்கை இராணுவம் பயங்கரவாதிகளுடனேயே போரிட்டது,இவர்கள் இங்கு நினைவேந்தலில் ஈடுபடுவது வெட்கமாக உள்ளது, இவர்கள் கள்ளப்புலிகள் என அவர்கள் தொடர்ந்து கோஷம் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

நினைவேந்தலில் ஈடுபட்டவர்கள் நிகழ்வு முடிவடைந்த பின்னர் அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்த வேளை அவர்களை நோக்கி கொட்டியா, டயஸ்போரா என கோஷமிட்டு கிண்டல் செய்துள்ளனர்.

அரசியல் வியாபாரிகளுக்கு காலம்

# “சிறந்த பாடத்தை கற்பிக்கும்”



“அற்ப அரசியலுக்காக இனவாதம் பேசி தேசிய மக்கள் சக்தியையும், தமிழ் பேசும் மக்களையும் பிரிக்க முற்படும் அரசியல் வியாபாரிகளுக்கு காலம் சிறந்த பாடத்தைக் கற்பிக்கும்” என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அத்துடன், எப்படியான அரசியல் சூழ்ச்சிகள் வகுக்கப்பட்டாலும் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் தேசிய மக்கள் சக்தியைக் கைவிட்டுச் செல்வதற்குத் தமிழ் பேசும் மக்கள் தயாரில்லை எனவும் அவர் கூறினார்.

“உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குப் பின்னடைவு ஏற்பட்டுவிட்டதாக அரசியல் களத்தில் எதிரணிகள் ஒப்பாரி வைக்கின்றன. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவை, பொதுத்தேர்தல் முடிவுடன் முடித்துப் போடுகின்றன. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் ஒப்பிட்டு பார்த்தால் நிலைமை புரியும்.

அதேபோல, தேசிய மக்கள் சக்தி 266 சபைகளைக் கைப்பற்றியுள்ளது. வடக்கிலும் 150 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். எனவே, பின்னடைவு, வீழ்ச்சி எனக் கூறப்படுவதெல்லாம் அப்பட்டமான பொய். மக்கள் ஆதரவு எமக்கு என்றும் உள்ளது. ஏனெனில் நாம் மக்கள் அரசியலை முன்னெடுப்பவர்கள்.

உண்மையான நல்லிணக்கம்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முழு வீச்சுடன் செயற்படுகின்றது. அதற்கு மக்களும் துணை நிற்கின்றனர். எனினும், இனவாதம் பேசி, மக்களைப் பிரித்தாளும் அரசியலை சிலர் முன்னெடுக்க முற்படுகின்றனர். அப்படியானவர்களுக்கு காலம் நிச்சயம் பதில் சொல்லும்” என்றார்.




## சுவாமி விபுலானந்த அடிகளாரின் கற்சிலை திறந்து வைப்பு

உலகின் முதலாவது தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 15 அடி உயர கருங்கல் கற்சிலை மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் சனிக்கிழமை (17) மாலை திறந்து வைக்கப்பட்டது.

அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணில் இருந்து சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தினர் மற்றும் பிரமுகர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

“விடிவானம் கண்ட கிழக்கொளியே! “ என்ற மகுடத்திலான வாழ்த்து மடல், அங்கு பணி மன்றத்தால் காரைதீவு மக்கள் சார்பாகக் கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு சபையின் தலைவர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

- வி.ரி.சகாதேவராஜா




## வீதி விபத்தில் ஊடகவியலாளர் உயிரிழப்பு

திருகோணமலை, ஹபரணை வீதியில் கல்வங்கு பிரதேசத்தில் சனிக்கிழமை(17) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கந்தளாய் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் பிரியான் மலிந்த என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரத்தினபுரியில் இருந்து கந்தளாய் நோக்கிப் பயணித்த போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



உயிரிழந்த நபர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகொரலவின் ஊடகச் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கல்கிசை துப்பாக்கிச் சூடு; சந்தேக நபர் கைது

கல்கிசை, நகரசபை ஊழியரான 19 வயது பிரவீன் நிஸ்ஸங்க சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக 45 வயதான நபர் சனிக்கிழமை (17) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் சில்வெஸ்டர் வீதி சந்திக்கு அருகில் வீதி சுத்தம் செய்யும் பணியில் மே 5 ஆம் திகதி ஈடுபட்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர், தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் என தெரிவிக்க ப்படுகின்றதுடன் துப்பாக்கிச் சூடு நடத்தி தலைமறைவாக உள்ள சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உளவுத்துறை தகவலின் பேரில், கல்கிசை பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், வெள்ளிக்கிழமை (16) அன்று ஹோமாகம



பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாக்கும்புர பிரதேசத்தில் வைத்து குறித்த நபரை கைது செய்தனர்.

சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் பாகங்கள் மற்றும் இரண்டு போலி இலக்கத் தகடுகள் பன்னிப்பிட்டியவில் உள்ள சந்தேக நபரின் வீட்டின் பின்புறத்திலிருந்து மீட்கப்பட்டன.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது

சுமார் 40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் கேரள கஞ்சாவுடன் 23 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நாவுல, பிபில - நிகலந்த பகுதியைச் சேர்ந்தவராவார்.

சந்தேக நபரிடமிருந்து 200 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 7 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, மாலபே, கஹந்தோட்டை வீதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த போதே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சுவிட்ஸர்லாந்துக்கு பயணித்தார் அமைச்சர் நளிந்த

உலக சுகாதார அமைப்பின் (WHO) 78ஆவது வருடாந்திர உலக சுகாதார மாநாட்டில் (WHA78) பங்கேற்பதற்காக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ ஞாயிற்றுக்கிழமை(18) காலை சுவிட்ஸர்லாந்துக்குப் புறப்பட்டுள்ளார்.

இந்த மாநாடு மே19 முதல் 27 வரை சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவாவில் ‘ஆரோக்கியத்திற்கான ஒரு உலகம்’ என்ற தலைப்பில் நடைபெறும்.

அனைத்து உலக சுகாதார அமைப்பின் உறுப்பு நாடுகளிலிருந்தும் சுகாதார அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

மேலும் உலகம் முழுவதும் உள்ள



சுகாதாரத் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 5,000க்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாடு நடைபெறும் போது, திட்டங்கள், கருத்துகள் மற்றும் ஆராய்ச்சித் தரவுகள் முன்வைக்கப்பட்டு பரிசீலிக்கப்பட வேண்டிய விரிவான விவாதங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாநாடுகளின் முடிவுகள் வரும் ஆண்டிற்கான உலகளாவிய சுகாதாரக் கொள்கைகள் மற்றும் உத்திகளை வடிவமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸயைத் தவிர, சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் நிபுணர் டாக்டர் அனில் ஜாசிங்க, ஜெனீவாவிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதி ஹிமாலி அருணதிலக, ஜெனீவாவிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நிஷாந்தினி விக்டர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொட்டாஞ்சேனை துப்பாக்கி சூடு;

## இருவர் கைது

கொட்டாஞ்சேனை, சுமித்ரா ராம பகுதியில் மே.16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் மற்றும் மோட்டர் சைக்கிள் சாரதி கைது செய்யப்பட்டதாக கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கொழும்பு - 13 பிரதேசத்தைச் சேர்ந்த 17-18 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் 42 வயதுடைய ஒரு ஆணும் அவரது பெரியம்மாவான 70 வயதுடைய பெண் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் , சட்டத்தரணி ஒருவர் மூலம் கொட்டாஞ்சேனை பொலிஸாரிடம் சரணடைந்த பின்னர், கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மினி சூறாவளியால் சில வீடுகளுக்கு சேதம்

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைப் பெரு நிலப்பரப்பிற்கு உட்பட்ட போரதீவுப்பற்று பகுதியில் சனிக்கிழமை(17) நண்பகல் திடீரென வீசிய மினி சூறாவளியினால் அப்பகுதியில் உள்ள சில வீடுகள் சேதமடைந்துள்ளது.

இந்நிலையில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளாந்தோட்டம் எனும் கிராமத்தில் வீட்டு முற்றத்தில் இருந்த தென்னை மரமொன்று வீட்டின் மீது வீழ்ந்துள்ளதுடன் வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளனர்.

இவ்வாறு திடீரென ஏற்பட்ட மினி சூறாவளி தாக்கத்தினால் வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், வீட்டிலிருந்த பாவனைப் பொருட்களும், பயன் தரும் தென்னை மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளது.

தமக்கு ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கசிப்பு நிலையம் சுற்றிவளைப்பு; பொலிஸார் மீது குளவி கொட்டு

பாலித ஆரியவன்ச

ஹப்புத்தளை, பிடரத்மலே தோட்ட பகுதியில் உள்ள கசிப்பு தயாரிப்பு நிலையத்தை சுற்றிவளைக்கச் சென்ற பொலிஸ் அதிகாரிகள், குளவி தாக்குதலுக்குள்ளான சம்பவம் சனிக்கிழமை (17) மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த தேயிலைத் தோட்ட மேல் பகுதியில் உள்ள ஒரு நீர்நிலைக்கு அருகில் இரண்டு நபர்களால் கசிப்பு வியாபாரம் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அவர்கள் அங்கு சென்ற போதே திடீரென குளவி தாக்குதலுக்குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது.



தாக்கப்பட்ட அதிகாரிகள் ஹப்புத்தளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கசிப்பு தயாரித்த சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பல உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதில் இழுபறி

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில், ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களை போலன்றி வாக்குப்பதிவும் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தது. ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பொதுத் தேர்தலிலோ காணப்படுவது போன்ற ஒரு சூடான அரசியல் சூழலைக் காணவில்லை. தேர்தல் பெறுபேறுகளுக்கு பிந்திய நிலைமையும் குழப்பகரமானதாகவே உள்ளது.

ஆட்சி அமைப்பதில், பல உள்ளூராட்சி சபைகளில் சிக்கலான நிலைமையே காணப்படுகின்றது. வடக்கு,கிழக்குக்கு வெளியே, எதிர்க்கட்சிகள் இணைந்து சில சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதற்கான இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன.

இதனால், சில கட்சிகளுக்கு இடையே உள்வீட்டு முரண்பாடுகளும் தோற்றியுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன. உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய அரசியல் காரணங்களை விட தனிப்பட்ட காரணங்கள் மிக முக்கியமானவை. தேர்தல் முடிவுகளை ஆராயும்போது இது மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. முந்தைய அரசாங்கம் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை ஒத்திவைத்தது, இது மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் செயலாகும்.

ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரபலத்தை அளவிடுவதற்குப் பல அரசியல் விமர்சகர்கள் இந்தத் தேர்தலை ஓர் அளவுகோலாகப் பயன்படுத்தினர். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது இருந்த சமூக-அரசியல் சூழ்நிலையையும், அவர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து கிட்டத்தட்ட ஏழு மாதங்களில் ஏற்பட்டுள்ள சமூக மாற்றத்தையும் புரிந்துகொண்டு முடிவுகளைப் படிப்பது மிகவும் முக்கியமானதாக இருக்கும்.

ஆளும் கட்சிக்குப் பிறகு அதிக அதிகாரத்தைப் பெறும் அரசியல் கட்சியால் எதிர்க்கட்சி உருவாக்கப்படுகிறது. ஆளும் கட்சியில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத பிற சிறிய குழுக்கள் மற்றும் கட்சிகளும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவை, அவர்கள் விரும்பினால் எதிர்க்கட்சித் தலைவரை ஆதரிக்கலாம்.

ஒரு நாட்டில் ஆரோக்கியமான அரசியல் ஜனநாயகம் நிலவ வேண்டுமென்றால், வலுவான எதிர்க்கட்சி இருக்க வேண்டும். ஆனால் தற்போது நமக்கு அவ்வளவு வலுவான எதிர்க்கட்சி இல்லை, மாறாக உலகளாவிய எதிர்க்கட்சி உள்ளது. அதாவது, பல முரண்பாடுகளைக் கொண்ட ஒரு எதிர்ப்பு, இங்கும் அங்கும் சிதறிக்கிடக்கிறது. அத்தகைய எதிர்ப்பு நிலையானதாக இருப்பதை விடத் துண்டு துண்டாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

எந்த சூழ்நிலையிலும் ஊழல் மற்றும் திருட்டு இல்லாத ஒரு மக்கள் பிரதிநிதிகள் குழு இருப்பதைக் கடந்த காலம் நமக்கு நிரூபித்துள்ளது. மக்களின் செல்வத்தை அனுபவித்து, மக்களைச் சுரண்டி, ஒடுக்கும் மேல்தட்டு அரசியல் முடிவுக்கு வந்துவிட்டது. ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல், இருக்கும் செல்வாக்கை கொஞ்சம், கொஞ்சமாக இழக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சிறப்பான காதலை வீம்புடன் எவரும் புறந்தள்ளினால், எதிர்காலத்தில் ஏக்க நிலையில் வாழவேண்டி ஏற்படும். காதலின் ஆழம், எதிர்காலத்தில் நம்பிக்கையான பரஸ்பர அன்பையும் விட்டுக்கொடுப்பையும் அழுத்தமாக்குகின்றது. எதையும் உணராமல் நெஞ்சத்துக்கு வஞ்சகம் செய்வதுபோல், பிரிவதால் வரும் ஏக்கம், வாழ்வின் அந்தம்வரை தொடரும்.

குடும்பங்கள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் உறவினர்கள் ஊடாகச் சொல்லப்படும் விமர்சனங்களைக் காதில் செலுத்தினால், பலரும் உண்மை நிலைபற்றிச் சிந்திப்பதில்லை.

ஒருவரைப் பற்றி ஒருவர் உணர, கால அவகாசம் பிரதானமானது. தங்களது தெரிவு சிறப்பானது எனத் தெரிந்து கொண்டதன் பின்னர், மனம் அலை மோதக்கூடாது. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

காதல் கலைந்தால், சம்பந்தப்பட்ட ஆண், பெண் பழி தீர்க்கும் செயலில் ஈடுபடுவது தவறாகும். உண்மைக் காதலர் இணைந்தால் சிறப்பு.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# தமிழ்த் தேசிய ஒற்றுமை-முள்ளிவாய்க்கால் 16

லக்ஷ்மன்

தமிழர்கள் ஒரு சமூகமாக முன்னோக்கிப் பயணிப்பதற்கு கடந்த காலங்களில் மீறல்கள் இடம்பெற்றன என்பதை அங்கீகரிப்பதும், அவை தொடர்பில் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதும் அவசியம் என வலியுறுத்தி பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்ராமர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் நினைவுகூரல் செய்தியை வெளியிட்டிருக்கிறார்.

அதே நேரத்தில், தமிழர்கள் தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கும், தமது தாய் நாட்டில் அமைதியாகவும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு உரித்துடையவர்களாவர். இலங்கை அதை கடந்த காலத்திலிருந்து முன்னோக்கிப் பயணிப்பதற்கும் பிரஜைகள் அனைவருக்குமான நிலையானதும் சுபிட்சமானதுமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் கடந்த கால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதும் இன்றியமையாததாகும் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டெபோரா ரோஸ் வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த இரண்டு கருத்துமே தமிழர்களுக்கு நிகழ்ந்த கொடூரத்துக்கு நீதி கோரி நடைபெற்று வருகின்ற போராட்டங்களின் வெளிப்பாடாகக் கொள்ளலாம். கடந்த காலங்களில் இது போன்ற பல வலியுறுத்தல்களும், கருத்துக்களும், அறிவிப்புகளும் வெளிவந்தே இருக்கின்றன. ஆனால் அவற்றினால் ஏதும் பயன் விளைந்ததாகத் தெரியவில்லை. மூன்று தாசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற ஆயுதப் போராட்டம் பல நாடுகளின் இணைவினால் 2009 மே மாதத்தில் இலங்கை அரசாங்கத்தால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட கடந்த 16 வருடங்களாகத் தமிழர்கள் தமக்கான நீதியைக் கோரி வருகின்றனர்.

அதே ஒழுங்கில் இவ்வருடத்திலும் கடந்த ஒரு வார காலமாக முள்ளிவாய்க்கால் நினைவு வார நிகழ்வுகள் வடக்கு, கிழக்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் நடைபெற்றன. இவற்றினை பல்வேறு அமைப்புகளும் கட்சிகளும் ஏற்பாடு செய்திருந்தன. உணர்வுப்பூர்வமாக நடைபெற்றுவரும் நினைவுகூரல்கள் சற்று வழமைக்கு மாறாக இவ்வருடம் அமைதியாக நடைபெறுகின்றன. இல்லையானால் பாதுகாப்புத் தரப்பினரது கெடுபிடிகள், தடை உத்தரவுகள், அச்சத்துக்கு மத்தியில் நடைபெறுவது வழக்கமாகும்.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டில் ஆட்சிக்கு வந்தவுடன் நடைபெற்ற மாவீரர் தின காலத்திலும் அதன் பின்னர் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு நாள் காலங்களிலும் பல நெருக்கடிகளைக் கொடுத்திருந்த பாதுகாப்புத் தரப்பு இப்போது அமைதி காப்பது சந்தேகத்தையும் எழுப்பியிருக்கிறது.

ஒவ்வொரு வருடத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில், இனப் படுகொலைக்கு நீதி வேண்டும், இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும் என்று கோருவதுடன், தமிழ்த் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்பட்ட தீர்வே தேவை என்பதனையும் வலியுறுத்தி வரும் தமிழர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சுவதாக இருந்து வருகிறது.

வருடத்தின் இரண்டு தடவைகளில் ஐக்கிய நாடுகள் சபையினை நம்புவதும் ஏமாறுவதும் நடைபெற்றே வருகிறது. முள்ளிவாய்காலுக்கு பல்லாயிரமாய் அணிதிரள்வதும் இறுதி யுத்த முள்ளிவாய்க்கால கஞ்சி அருந்துவதும் தமிழ் மக்கள் அன்றைய காலத்தில் அனுபவித்த கொடுமைகளை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றன. ஆனால், அவற்றினை யாரும் பெரிதாகக் கணக்கிலெடுப்பதாக இல்லை. இருந்தாலும், தமிழர்கள் தங்கள் அடுத்த சந்ததிக்குத் தமிழர்களின் போராட்ட வரலாற்றைக் கடத்துவதும் சில தேவையற்ற விமர்சனங்களுக்கு உள்ளாவதுமே நடைபெறுகின்றன.

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நடைபெற்ற அத்துமீறல்களுக்கு எதிராக ஆயுத இயக்கங்கள் உருவாயின. அதற்கு முன்னர் நடைபெற்ற அகிம்சை ரீதியான போராட்டங்களில் தோல்வியே ஆயுத இயக்கங்களின் உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்தது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காகப் போராடப் புறப்பட்ட இயக்கங்களின் இலக்கு ஒன்றாக இருந்த போதிலும் நடைமுறைகள், சித்தாந்தங்கள், கொள்கைகள், அணுகுமுறைகள் காரணமாக இலக்கை மறந்தவர்களாகவும், சந்தேகங்கள், மற்றும் தவறான எண்ணங்களால் முரண்பட்டு ஒரு எல்லைக்கு அப்பால் மோதலை நடத்தினர். இந்த மோதல்களில் துரோகிகள், விரோதிகள் எனப் பலரும் உருவாக்கப்பட்டனர்.

ஆயுதப் போராட்டம் மட்டுமே அரசியல் விடுதலைக்கான வழி என்ற நிலை ஏற்பட்டதன் காரணமாக நீண்ட காலம் ஆயுதப் போராட்டமே நடைபெற்று வந்தது. இருந்தாலும் பல சந்தர்ப்பங்களிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளைக் காண்பதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இருப்பினும் அவை தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. ஆனாலும் அரசியல் ரீதியான செயற்பாடும் விடுதலைக்குத் தேவை என உணரப்பட்டதன் பலனாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணைக்கப்பட்டு 2001இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இடையில் தமிழர் விடுதலைக் கூட்டணி விலக இலங்கை தமிழரசுக் கட்சி சேர்க்கப்பட்டது) விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது. இந்தக் கூட்டு அரசியல் ரீதியாகவும், விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாகவும் தமிழ் மக்களது அரசியல் அபிலாஷை நிறைவேற்றத்துக்கான ஏக பிரதிநிதிகளாக பிம்பப்படுத்தப்பட்டிருந்தனர். ஆனால், 2009 மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டதுடன், விடுதலைப்புலிகள் அமைப்பு இல்லை என்றானது.

அதன் பின்னர் தமிழர்களின் தலைவிதி யார் கையில் இருக்கிறது என்பது கேள்விக்குறியாகிப் போயிருக்கிறது. அதை முள்ளிவாய்க்கால் முடிவு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையைப் புதைத்து விட்டதாகக்கொள்ள வேண்டியிருக்கிறது. பல்வேறு அமைப்புகளும் கட்சிகளும் முள்ளிவாய்க்கால் நினைவுகளை மேற்கொண்டு வந்தாலும், தமிழர்களிடம் ஒற்றுமையின்மை அதிகரித்திருக்கிறது. இந்த ஒற்றுமையின்மை காரணமாகத் தமிழர்களின் போராட்டம் வலுவிழந்து வருகிறது என்றே சொல்லவேண்டும்.

இருந்தாலும், புலம்பெயர் நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டங்களும் இலங்கை அரசாங்கத்தை இனப் படுகொலையாளியாக நிரூபிக்கும் முயற்சிகளும் மிகத் தீவிரமாக நடைபெற்று வருவதைக் காணமுடிகிறது.

இருந்தாலும், வடக்கு, கிழக்கில் மக்களின் உணர்வு சார்ந்த விடயமாக இருந்து வருகின்ற முள்ளிவாய்க்கால் அவலமானது சரியான வகையில், அரசியல் கட்சிகளாலும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளாலும் கையாளப்படவில்லை என்றே கொள்ளலாம். அதேநேரத்தில், எதிர்கால சந்ததியினருக்கு இதன் தாற்பரியம், தமிழ் மக்களுடைய அரசியல், உரிமைக்கான சுய நிர்ணயப் போராட்டம் குறித்த விடயங்கள் கடத்தப்படுகின்றனவா என்ற கேள்வி இருந்து கொண்டேயிருக்கிறது. அரசாங்கங்கள் மேற்கொள்கின்ற வரைமுறைகள், அல்லது செயற்பாடுகள் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை இல்லையென்றாக்க முடியாது என்பது பொதுக் கருத்தாக இருந்தாலும், தலைமுறை மாற்றங்கள் காரணமாகப் போராட்டம் மழுங்கடிக்கச் செய்யப்படுகின்ற நிலையை அவதானிக்க முடிகிறது.

தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில் பெற்றோர்கள், குடும்ப உறவுகள், போராளிகள் என லட்சக்கணக்கானவர்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்களின் நினைவு என்பது எமது உள்ளத்தில் எப்போதும் இருக்கின்ற விடயம். இதனைப் பொதுவெளியில், உலகறியத்தான் அனுஷ்டிக்க வேண்டும் என்றில்லை. அவர்களின் தியாகங்களை எண்ணி எமது உள்ளத்தில் இருந்து எழும் கண்ணீர் கூட அவர்களுக்கான அஞ்சலிதான். இதனை யாரும், எந்த அரசாங்கமும் தடுக்க முடியாது என்கிற நிலைப்பாடும் குறிப்பிட்ட மக்களிடம் இருந்தாலும் முள்ளிவாய்க்கால் பேரவலம் என்பது சரியாக மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருப்பது இந்த இடத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 வருடங்கள் கடந்துவிட்டது. அதன் பின்னர் ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை அறிக்கைகளை வழங்கியிருக்கின்றன. இருந்தாலும் அவற்றின் அறிக்கைகளால் காணாமல்போனாருக்கான அலுவலகம், மரணச் சான்றிதழ் வழங்கல் என சில விடயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அதனைப் பாதிக்கப்பட்டவர்கள் முழுமையாக ஏற்கவில்லை. இவ்வாறான நிலையில்தான் புதிய அரசாங்கம் அரசியலமைப்பு மாற்றத்தினை மேற்கொள்ளவுள்ளோம் என்று அறிவித்திருக்கிறது.

இன அழிப்பு, மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் சர்வதேசத்தினால் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் சர்வதேசத்தை எதிர்பார்த்திருக்கின்ற தமிழர் தரப்பினர் இந்த அரசியலமைப்பு மாற்றத்தினை ஏற்பார்களா என்பது பரியாத புதிரே. எப்போதுமே தமிழர்களுக்குத் தனியான பிரச்சினை இல்லை என்ற ஒரு நிலைப்பாட்டிலிருக்கின்ற பேரினவாதத்திடம் தமிழர்களுக்காக நீதியையே பக்கச் சார்பின்மையையோ எதிர்பார்க்கலாமா என்பது இந்த இடத்தில் கேள்விதான்.

யுத்தத்தில் பலியான படையினருக்கான 16ஆவது தேசிய போர் வீரர் நினைவு நாள் வைபவம் நடைபெறும் நாட்டில் தமிழர்களுக்கான இன அழிப்பு நீதியைக் கோருவது எந்தளவுக்கு சாத்தியப்பாடுடையது. இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தோற்றம் பெற்றிருந்தாலும் இதுவரையிலும் தீர்ப்பதற்கான எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுத்திராத இலங்கை அரசிடம் இனிவரும் காலத்திலும் அதற்குச் சாத்தியம் இருக்கும் என்று நம்புவது புத்திசாலித்தனம் தானா என்றும் சிந்திக்கவேண்டும். இது முள்ளிவாய்க்கால் நேரத்திலேனும் நினைவுபடுத்தப்படட்டும். அதேநேரத்தில், மக்களுக்காக அரசியலை நடத்தும் அரசியல் தரப்பினர் தமக்குள் இருக்கும் முரண்களையும் களைந்துகொள்ள முயலவேண்டும். இதுவே முள்ளிவாய்க்கால் அவலத்துக்கான சரியான அஞ்சலியாகவும் இருக்கும்.

## கடிதங்கள்

### கழிவு சேகரிப்பில் அசமந்தம்

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வாரத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டுவரும் திண்மக்கழிவு அகற்றும் வேலைத்திட்டம் முறையாக மேற்கொள்ளப்படாமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கழிவகற்றும் வாகனங்கள் வராத காரணத்தால், வீதிகளில் வைக்கப்படும் கழிவுகள் கட்டாக்காலி மாடுகளால் சேதப்படுத்தப்பட்டு, வீதியெங்கும் துர்நாற்றம் வீசுவதுடன், பாதசாரிகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கழிவகற்றும் செயற்பாட்டில் தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் என பாகுபாடு இடம்பெற்று வருவதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

எனவே, எல்லோரும் சமமாகப் பார்க்கப்பட்டு, திண்மக்கழிவுகள் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட்.ஏ.எம்.பைஷல் மற்றும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி ஆகியோரிடம் அட்டாளைச்சேனை பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- அபு அலா



# நீங்கள் தனிமையில் இல்லை



கடந்த சில மாதங்களாக, இலங்கையில் நாடாளாவிய ரீதியில், சமூகங்களைக் கடந்து, துயர் அலைகளைத் தோற்றுவிக்கும், பதின்ம வயது தற்கொலை அதிகரிப்பைக் காணக்கூடியதாகிறது.

இந்த துயர்மிகு இழப்புகள் குடும்பங்களைச் சின்னாபின்னமாக்கி,சமூகங்களை இதற்கான விடிவைத் தேட வைத்துள்ளது. இந்த நெருக்கடி நிலையை நாம் ஒன்றாக எதிர்கொள்ளும்போது, நிலைமையைக் கவனித்து, திறந்தமனத்துடன் வழிகளைத்தேடி, பாதிக்கப்படக்கூடிய இளையோருக்கான உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

## நெருக்கடியை புரிந்துகொள்ளல்

பதின்ம வயது தற்கொலைகள் பின்வருவன உள்ளடங்கலாக, பலகாரணிகளில் இருந்துதோன்றுகின்றன

1. கல்வி முறை நெருக்கடியும் பரீட்சை மன அழுத்தமும்.
2. குடும்பத் தகராறுகளும் வீட்டுக் கஷ்டங்களும்
3. சமூகத் தனிமைப் படுத்தலும் கொடுமைப்படுத்தலும் (இணையவழி கொடுமைப்படுத்தல் உட்பட)
4. மன அழுத்தம்,கவலை,போன்ற சுகப்படுத்தாத மன நல நிலைமைகள்.
5. அதிர்ச்சிகரமான சம்பவங்களுக்கு முகங்கொடுத்தல்
6. குடும்பத்தை தாக்கும் பொருளாதார நிலைமைகள்
7. முன் மாதிரி தற்கொலை (பிரதி நடவடிக்கை)

இந்த அழுத்தங்களின் கூட்டும், குறிப்பாக, இலங்கையின் சவாலான பொருளாதார நிலைமைகளும் நீடிக்கும் சர்வதேச நோய்ப்பரவலும் இளையோர் மன நலத்தில் புயலை உண்டாக்கியுள்ளது.

## கவனிக்க வேண்டிய எச்சரிக்கைக்குறிகள்

1. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகத்தினர், நண்பர்கள் இந்த அறிகுறிகளுக்கு விழிப்புடன் இருக்க வேண்டும்.
2. முன்பு ஈடுபட்ட நடவடிக்கைகளிலிருந்து பின்வாங்குதல்.
3. உணவு உட்கொள்ளல், நித்திரை செய்தல் என்பவற்றில் மாற்றம்.
4. நம்பிக்கையின்மை, மதிப்பின்மை பற்றிய பேச்சும், பிறருக்கு சுமையாக இருப்பதான எண்ணமும்.
5. மதிப்புள்ள தன் பொருளைப் பிறருக்குக் கொடுத்தல்.
6. தனிமையிலிருத்தல் அதிகமாவதும், அடிக்கடி மன நிலைமாறுதலும்.
7. இறத்தல்,தற்கொலை செய்தல் என்பது பற்றி பேசிக் கொள்ளல்.
8. கல்வி செயற்பாடுகளில் குன்றுதல்.
9. ஆபத்துகளில் ஈடுபடுதல் அதிகரித்தல்.
10. மௌனத்தைக் கலைத்தல்

திறந்த மனத்துடன் பேசுதல், தற்கொலையைத் தடுப்பதில், பயனுள்ள வழிகளில் ஒன்று. பொதுவான தவறான கருத்துக்கு மாறாக, தற்கொலை பற்றி பேசுதல் ஒருவர் மனத்தில் தற்கொலை எண்ணத்தை உண்டாக்காது.
அதனிடத்தில் அமைதியாக துன்பப்படுவாருக்கு, உதவி உண்டெனக் காண்பித்து நிம்மதியைக் கொடுக்கும்.

## உதவிக்கான வழங்கள்

உங்களுக்கு அல்லது நீங்கள் அறிந்தவருக்குத் தற்கொலை எண்ணங்கள் உண்டாயின், உடனடியாக பின்வரும் உதவிச் சேவைகளைத் தொடர்பு கொள்ளுங்கள்.
மன நலதேசிய நிறுவனம் 1926 CCLine 1333 (வருடத்தில் 365 நாள்களும், 24/7 மணிநேரமும், மும் மொழிகளிலும் இயங்கும், இரகசியம் பேணப்படும், இலவச நெருக்கடி உதவிச் சேவை) சுமித்ரயோ 011-2692909, 011-2696666

மேலதிக இளையோர் உதவி வழங்கள்:

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 1929 இளையோருக்கு உதவுதல், இளையோர் பாதுகாப்பாகவும், மதிக்கப்படுவதாகவும், புரிந்து கொள்ளப்படுவதாகவும், உணரும் வகையான சூழலை ஏற்படுத்துவதற்கு, சமூகம் என்ற வகையில் நாம் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும். பாடசாலைகளில் மன நலவிழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலமும், பெற்றோர் பிள்ளைகளுடன் மனந்திறந்து பேசுவதன் மூலமும், சமுதாயம் மனநல உதவி பெறுவதைக் களங்கமானது எனக்கொள்ளாது.

## CCCline's 'let'sTALK' நிகழ்ச்சி

இலங்கை முழுவதும் 365 நாள்களும் 24 மணிநேரமும் மும்மொழிகளிலும் 'let'sTALK' என்னும் வசதியை வழங்குவதில் பெருமை கொள்கிறது. இது இளையோருக்கு உளவியல் ரீதியில் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டம். அவுஸ்திரேலிய தற்கொலைத் தடுப்பு முறைமையின் அங்கீகாரம் பெற்ற, அழைப்பை ஏற்படுத்துவோருக்கு இரகசியம் பேணும் மூலம் CCCline பாடசாலைகளுக்கும், இளையோர் குழுக்களுக்கும் உதவிவழங்குகிறது. கல்வி நிலையங்களுக்கும், சமூக அமைப்புகளுக்கும், நடைமுறை உத்திகளைத் தந்துதவி இளையோர் தம் மனநல பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவர்களை மற்றையோர் கண்டு, கேட்டு மதிப்பளிக்கும் சூழலை உருவாக்கும்.

''let'sTALK' நிகழ்ச்சியை நடத்த விரும்பும் பாடசாலைகளும் இளையோர் அமைப்புகளும் CCCline' 0112 633 237, 077 787 5555 என்னும் இலக்கத்தினூடாக இந்த உயிர்காக்கும் செயலைப் புரிந்துகொள்ளும் நிகழ்வை தங்கள் சமூகத்தின் நன்மைக்காக ஒழுங்கு செய்ய முடியும்.

## தொண்டர் சந்தர்ப்பங்கள்

உணர்வுபூர்வ நெருக்கடியில் உள்ள பிறருக்கு உதவுவதன் மூலம் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நீங்கள் விரும்புவீர்களாயின், உங்கள் தொண்டு உதவியை CCC Line வரவேற்கிறது. பயிற்றப்பட்ட எமது நெருடி நிலை உதவியாளர் குழுவுடன் இணைவதன் மூலம், தேவைப்படுவோருக்கு, முக்கிய உணர்வுபூர்வ உதவியை நீங்கள் செய்யமுடியும். தொண்டு செய்யும் சந்தர்ப்பங்களை மேலும் தெரிந்துகொள்ளவும், இலங்கையில் தற்கொலைத் தடுப்பு முயற்சியில் பங்குகொள்ளலாம் என அறிந்துகொள்ளவும் 0112633237 என்னும் இலக்கத்தில் CCC Line. க்குஅழைப்பை ஏற்படுத்துங்கள்.

## பதின் மவயதினருக்கான ஒரு செய்தி

மனதிலே போராட்டமா? நம்பிக்கையின்மை உணர்வு தற்காலிகமானது. தற்கொலை அதற்கு நிரந்தர தீர்வாகாது. உங்கள் வாழ்வு மிக மதிப்புள்ளது. உங்கள் மீது மிகுந்த அக்கறை உள்ளவர்களும் உங்களுக்கு உதவுபவர்களும் இருக்கிறார்கள். உதவுதலுக்குத் துணிபு வேண்டும். அதுவே நன்றாக உணர்வதற்கான முதல் அடி.

உங்கள் பிரச்சினைகள் இப்பொழுது எவ்வளவு பெரிதாகத் தோன்றினாலும் அவற்றிற்குத் தீர்வு உண்டு. உங்களுக்குக் கஷ்டகாலத்தில் உதவப் பலர் தயாராக உள்ளார்கள். உங்கள் பிரச்சினைகளில் நீங்கள் தனிமையில் இல்லை.



## உப்பில்லாப் பண்டம் குப்பையிலா?

# அனுர உப்பிடுவாரா?



ச.சேகர்

இலங்கையில் உப்பு தட்டுப்பாடு ஏற்படும் என 2024 டிசம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 120 ரூபாயாக காணப்பட்ட உப்பு கிலோ கிராம் ஒன்றின் விலை 180 முதல் 200 ரூபாயாக உயர்ந்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனாலும், தற்போது, இம்மாதத்தின் முற்பகுதியிலிருந்து இந்த உப்பின் விலை கிலோ கிராம் ஒன்றுக்கு 400 முதல் 500 ரூபாயாக உயர்ந்துள்ளதையும், பெருமளவான விற்பனை நிலையங்களில் அல்லது கடைகளில் உப்புக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் பல பிரதேசங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

நாலாபுறமும் கடலால் சூழ்ந்த இயற்கை வளம் மிக்க இலங்கை நாட்டில், இயற்கையாகக் கிடைக்கக்கூடிய கடல்நீரையும், சூரிய ஒளியின் வெப்பத்தையும் கொண்டு உப்பு உற்பத்தி நடைபெறுகிறது. நாட்டின் புகழ்பெற்ற உப்பளமாக ஆனையிரவு உப்பளம் பற்றி பெரிதும் பேசப்பட்டாலும், யுத்தம் காரணமாக அதன் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு, இந்த அனுர அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதன் செயற்பாடுகள் ஒரு சில சர்ச்சைகளுக்கு மத்தியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆனையிரவுக்கு மேலதிகமாக, ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் போன்ற பகுதிகளில் உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இப்பகுதிகள் உப்பு உற்பத்திக்கு அவசியமான உரிய காலநிலையைக் கொண்டுள்ளன. உப்பு உற்பத்திக்குக் கடல் நீர் மட்டும் இருந்தால் போதாது. தொடர்ச்சியாக 45 முதல் 50 நாட்களுக்கு இடைவிடாது நன்கு சூரிய வெளிச்சம் காணப்பட வேண்டும். ஆனாலும், கடந்த ஆண்டில் நாட்டின் வறண்டப் பகுதிகளான புத்தளம், ஹம்பாந்தோட்டை போன்றன உள்ளடங்கலாகப் பெருமளவான பகுதிகளில் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தமை இந்த உப்பு உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இதனை அடிப்படையாகக் கொண்டே கடந்த டிசம்பர் மாதம் நாட்டில் உப்புக்குத் தட்டுப்பாடு வரலாம் என உப்பு உற்பத்தியாளர்கள் எதிர்வுகூறியிருந்தனர்.

சிஸ்டம் சேன்ஜ் எனக்கூறிக்கொண்டு பல செயற்பாடுகளை முன்னெடுக்கும் இந்த அநுர அரசாங்கமும், இந்த உப்புப் பிரச்சனையை முன்னைய அரசாங்கங்களைப் போலவே கையாள்வதை அவதானிக்க முடிகிறது. உப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு தலையிட்டு 30,000 மெட்ரிக் டொன் உப்பை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. இறக்குமதி செயற்பாடுகளுக்குத் தனியார்த் துறைக்கும் அனுமதியளிக்கப்படும்பட்சத்தில், இந்தப் பிரச்சினைக்குத் துரிதமாகத் தீர்வு காணக்கூடியதாக இருக்கும். ஏனெனில், இந்த ஆண்டிலும் நாட்டின் உப்பளங்களுக்குத் தொடர்ச்சியாக 45 - 50 நாட்களுக்கு சூரிய வெளிச்சம் கிடைக்குமா என்ற கேள்வி நிலவுகிறது. வழமையாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை இம்முறை மாற்றமடைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. பெருமளவான பகுதிகளில் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலை தொடர்வதற்கு அதிகளவு சாத்தியக்கூறுகள் காணப்படும் நிலையில், இந்த உப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண அநுர அரசாங்கம் சிஸ்டம் சேன்ஜ் செய்யும் விதத்தில் யோசிக்காமல் செயற்படுவது வியப்பூட்டுவதாக அமைந்துள்ளது.

நாட்டின் ஆண்டுக்கான சராசரி உப்புத் தேவை ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மெட்ரிக் தொன்னாக அமைந்துள்ளது. அதில் இல்லங்கள் அடங்கலாக, உணவு நுகர்வுக்கு சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மெட்ரிக் டொான் உப்பு தேவைப்படுகின்றது. எஞ்சிய தொகை இதர தொழிற்துறைசார் உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

உப்பு நுகர்வை எடுத்துக் கொண்டால், இலங்கையின் சராசரி தனிநபர் ஒருவர் ஒருநாளில் சுமார் 10 கிராம் உப்பை உணவினூடாக உள்ளெடுப்பதாகவும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையின் பிரகாரம் ஒரு நாளில் நபர் ஒருவர் உள்ளெடுக்க வேண்டிய உப்பின் அளவு 5 கிராம்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அளவுக்கதிகமாக உப்பு நுகர்வுக்கு இலங்கையர்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ள நிலையில், தற்போது இந்த உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தாம் உள்ளெடுக்கும் அல்லது நுகரும் உப்பின் அளவை குறைத்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருப்பதாகவும் குறிப்பிட முடியும். அதிகளவு உப்பு உள்ளெடுப்பதனூடாக குருதி அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் கள நிலைவரத்தை எடுத்துப்பார்த்தால், உப்புக்கு உக்கிரமான தட்டுப்பாடு நிலவுவதைக் காண முடிகிறது. சுப்பர் மார்க்கெட்களில் ஒரு நபருக்கு இரண்டு பைக்கற்களுக்கு அதிகமாக உப்பு கொள்வனவு செய்ய முடியாது என்ற கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

வீடுகளில் உணவு தயாரிப்பதற்குக் காணப்படும் சிக்கல்களை விட, இலங்கையின் பிரதான வெளிநாட்டு வருமான மீட்டும் சுற்றுலாத்துறையும் இந்தப் பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு தயாரித்து வழங்கும் உணவகங்கள், சுற்றுலா தங்குமிடப் பகுதிகள், ஹோட்டல்கள் போன்றவற்றுக்கு உப்பு தேவை அதிகமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தட்டுப்பாட்டினால் அவையும் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளன.

ஆறு மாதங்களுக்கு முன்னதாக ஒரு பிரச்சினை எழவுள்ளது என்பது பற்றிச் சம்பந்தப்பட்ட தரப்பினர் எச்சரிக்கைவிடுத்தும, அது தொடர்பில் அக்கறை கொள்ளாமல், எவ்விதமான முன்கூட்டிய திட்டமிடல்களுமின்றி, தட்டுப்பாடு ஏற்படும் வரை காத்திருந்து, அந்தப் பிரச்சனையையும் தன் தலையில் போட்டுக் கொண்டுள்ள இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளும், முன்னைய அரசாங்கங்களைப் போலவே காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் அதிகளவு சூரிய ஒளி கிடைக்கும் சூழல் காணப்படுகிறது. உப்பு உற்பத்திக்கு உகந்த காலநிலை அங்கு நிலவும் நிலையில், உப்பளங்களை நிறுவும் முயற்சிகளுக்கு அரசாங்கம் வாய்ப்பளிக்கலாம். இலங்கையின் உப்பு உற்பத்தியின் 50 சதவீதத்துக்கும் அதிகமான பங்கை அரசாங்கம் தன் வசம் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, உப்பில்லாப் பண்டம் குப்பையில் எனும் பழமொழிக்கமைய வாழப்பழகிய நாம், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கமைய, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைக்கமைய அளவுக்கதிகமான உப்பு நுகர்வதைத் தவிர்த்து, ஆரோக்கியத்திலும், பொருளாதாரத்திலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன், அநுர அரசாங்கம் உப்பு வழங்க வேண்டும், அனுர உப்பிடுவாரா என எண்ணிக் கொண்டிருப்பது, விழலுக்கு இறைத்த நீர் போன்றதாகும்.



நந்திக்கடலில்...



முள்ளிவாய்க்காலில்...



















# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்...

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவுநாள் வடக்கு, கிழக்கில் உணர்வுப்பூர்வமாக ஞாயிற்றுக்கிழமை (18.05.2025) அனுஷ்டிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் வாரத்தில், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் விநியோகிக்கப்பட்டது.

(வடக்கு, கிழக்கு தமிழ்மிரர் நிருபர்கள்)

மன்னாரில்...









பலாதோட்டத்தில்...





தம்பலகாமத்தில்...









வவுனியாவில்...









வேலூரில்...



திருகோணமலையில்...







# மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் வருமா?



ஜே.ஏ.ஜோர்ஜ்

**“அரசியல் என்பது எதிர்காலத்தை வடிவமைப்பதை விட, எதிர்காலத் தேர்தல்களை நினைப்பதாக மாறிவிட்டது.” – வின்ஸ்டன் சர்ச்சில் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் என கடந்த ஒரு வருடத்துக்குள் மூன்று தேர்தல்களை இலங்கை கடந்து விட்டது. அடுத்தடுத்து நடக்கக்கூடிய தேர்தல்கள், மக்களை சலிப்படைய செய்யக்கூடியவை என்பதை அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் சொல்லிவிட்டுச் சென்றிருக்கின்றது.**

கடந்த ஒன்பது மாதங்களில் அடுத்தடுத்து தேர்தல்களை சந்தித்ததால் வாக்காளர்களுக்கு சோர்வு ஏற்பட்டிருந்தது. பெரும்பாலான இலங்கையர்கள், குறிப்பாக, இளையவர்கள், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். இருப்பினும், மூன்றாவது தேர்தலுக்கான ஆர்வம் குறைவாகவே இருந்தது.

“வயது முதிர்ந்த பலர் மிகவும் நேர்த்தியாக, வாக்களிப்பதைக் கடமையாக எண்ணி வாக்களித்தனர். இளையவர்கள் ஏக்கத்துடனும், குழப்பத்துடனும் வாக்களித்தனர். நிறைய வாக்குகள் போடப்பட்டிருக்கவில்லை. ஆட்சியாளர்களை ஆட்சிக் கதிரையில் ஏற்ற வாக்களிக்கும் முகங்களை வாக்களிக்கும் நாளன்று பார்த்தால், அவர்கள் எவ்வளவு எதிர்பார்ப்புக்களை சுமந்து வருகின்றார்கள் என்பது விளங்கும் என்கிறார் தர்ஷிக்கா துஷ்யந்தன்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் கடமையில் ஈடுபட்ட தர்ஷிக்கா, “மாற்றம் நம்மில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஆட்சிபீடம் ஏறுபவர்களிடம் கேள்வி கேட்க வாக்களித்தவர்கள் என்ற ரீதியில் மக்களுக்கு உரிமை உண்டு. ஊரை அபிவிருத்தி செய்வதுதான் அவர்களது முதல் பொறுப்பு என்பதை அவர்களை உணரச்செய்ய வேண்டும். ஊருக்கு என்ன தேவை என்பதைப் பட்டியலிட்டு, அவர்களது கைகளில் மக்கள் கொடுக்க வேண்டும்” என்கிறார்.

மே 06ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 49 கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 75,000க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் இருந்த நிலையில், வாக்குப்பதிவு 50-60 சதவீதத்திற்கு இடையில் தான் இருந்தது. இது 2018 இல் பதிவான 80 சதவீதத்திலிருந்து கணிசமான அளவு சரிவாகும். அத்துடன், உள்ளூராட்சித் தேர்தல் வார நாளில் நடத்தப்பட்டதால் பணிபுரியும் வாக்காளர்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தலைக் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதி வாக்களிக்காமல் இருந்ததையே காணமுடிந்தது.

உள்ளூராட்சி மன்றங்கள் என்பது உள்ளூர் மக்களின் அன்றாடத் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவற்றுக்குத் தீர்வு காணும் முக்கியமான அரசியல்-சமூக அமைப்புகளாகும். ஆனால், வயது வித்தியாசம் மற்றும் சமூக மாற்றங்களால் வெவ்வேறு தலைமுறைகள் இவற்றை வெவ்வேறு கோணங்களில் பார்க்கின்றன.

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் 9ஆவது பிரிவின் 4.1, 4.2, 4.3 ஆகிய உறுப்புரைகள் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரம் வழங்கப்படுகின்றன. 1987ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி செயற்பாடுகள் மாகாண சபையின் கீழ் ஒப்படைக்கப்பட்டன. எவ்வாறாயினும், உள்ளூராட்சியுடன் தொடர்புடைய கட்டமைப்புகளையும் தேசிய கொள்கைகளையும் தயாரிக்கும் அதிகாரம் மத்திய அரசின் கீழ் வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், மாநகர சபை கட்டளைச் சட்டம் (1947), நகர சபை கட்டளைச் சட்டம் (1939), பிரதேச சபை கட்டளைச் சட்டம் (1987) என்ற 3 சட்ட தயாரிப்புகள் மூலம் உளளூராட்சி நிறுவன கட்டமைப்பு நிர்வகிக்கப்படுகின்றது.

இலங்கையில் 29 மாநகரசபைகள், 36 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் என 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளதுடன், இம்முறை எல்பிட்டிய பிரதேச சபை மற்றும் கல்முனை மாநகரசபை ஆகியவற்றைத் தவிர்த்து 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

நாட்டின் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் நடவடிக்கைகள், திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் என்பன மக்கள் மத்தியில் சென்றடைவதற்கான முக்கிய அரசியல் நிறுவனங்களாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்த வரை மூத்த பிரஜைகள், உள்ளூராட்சி மன்றங்களை “அரசாங்கத்தின் நேரடி பிரதிநிதிகள்” என்று கருதுகின்றனர். அவர்களின் காலத்தில், கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகள், வீதிகள், கிணறுகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை விடயங்களை செய்துகொடுப்பதில் முக்கிய பங்கு வகித்ததாகவே இவர்கள் கூறுகின்றனர். அத்துடன், பெரும்பாலானவர்கள், உள்ளூராட்சி மன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் என்பதை இது குறித்து மூத்த பிரஜைகள் பலருடன் பேசியதில் அறிந்துகொள்ள முடிந்தது.

மக்களின் தேவைகளை இனங்காண்பதுடன், அவற்றை நிறைவேற்றுவதற்கென உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மனறங்கள், தற்காலத்தில் மக்களுக்கு அதிக சேவைகளை வழங்கக் கூடிய பொறுப்பினை கொண்டுள்ளன. தனிப்பட்ட பிரஜை மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்வு, நலன்புரி சேவைகள் உள்ளிட்ட விடயங்களை நிறைவேற்றுவதில் அளப்பரிய பங்கு உள்ளூராட்சி மனறங்களுக்கே இருக்கின்றது.

தனது கிராமத்தில் வீதிகள், மற்றும் வடிகால் அமைப்பு, சிறுவர் பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்டவற்றை உள்ளூராட்சி மன்றங்கள் நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்பில் இம்முறை தேர்தலில் வாக்களித்தாக கூறுகின்றார் திருகோணமலை புறநகர் பகுதியை சேர்ந்த கார்திகா கமல்ராஜ். சமூகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்து தேர்தல்களிலும் தான் முன்னின்று வாக்களித்து” வருவதாக அவர் கூறுகின்றார். சுமார் 3 வருடங்களாக உள்ளூராட்சி மன்றங்களில் தமது பிரதிநிதிகள் செயற்படாத நிலையில், பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் புதிதாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார். அத்துடன், அப்பகுதியில் உள்ள கிராமங்களில் நூலகங்கள் உள்ளிட்ட அறிவுசார் விடயங்களை அமைத்து அங்குள்ள சிறார்களின் சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப உள்ளூராட்சி மன்றங்கள் முன்வரவேண்டும் என்பதே கார்திகா கமல்ராஜின் எதிர்பார்ப்பாகும்.







கார்த்திகா



ஹரிஹரன்

“மனிதன் இயற்கையிலேயே ஓர் அரசியல் விலங்கு” என கிரேக்க தத்துவஞானியான, அரசறிவியலின் தந்தை என அறியப்படும் அரிஸ்டாட்டிலே கூறியிருக்கின்றார். அதன்படி, எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசினுடைய பிரதான நோக்கமாக இருப்பது மக்களுக்குத் தேவையான சேவை வழங்குவதாகும். இந்த சேவைகளை பெற்றுக்கொள்வதில் மக்கள் அதிகம் நாட்டம் கொண்டவர்களாக உள்ளதுடன், பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில், சனத்தொகை பெருக்கத்துக்கு அமைவாக உள்ளூராட்சி மன்றங்களின் தேவை அதிகரித்து வரும் நிலையில், இலங்கையில் பாரிய நகரங்கள் மாநகர சபைகளாகவும், சிறிய நகரங்கள் நகர சபைகளாகவும் கிராமப் பகுதிகள் பிரதேச சபைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

அந்தந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து துரிதமான முறையில் சேவைகளை வழங்கவேண்டிய பொறுப்பு இந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கே உள்ள நிலையில், அதனை சரியாக உணர்ந்து செயற்படக்கூடிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியது வாக்காளர்களாகிய மக்கள் பொறுப்பாகும். அதனால் தான் ஏனைய தேர்தல்களை விட உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது மக்களுக்கு மிகவும் நெருக்கமான ஒன்றாக பார்க்கப்படுகின்றது.

ஆனால், இலங்கையை பொருத்த வரையில் ஏனைய தேர்தல்களை விட குட்டித் தேர்தல் என்று அழைக்கப்படுகின்ற உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்கும் ஆர்வம் ஒப்பிட்டளவில் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

கொவிட் பெருந்தொற்று, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் ‘அரகலய’ போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் அமைதியின்மை, உறுதியற்ற தன்மை காரணமாக 2022ஆம் ஆண்டில் நடக்கவேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. இதனையடுத்து, முந்தைய பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவடைந்த மார்ச் 2023 முதல், தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் உள்ளூர் அரசாங்கங்கள் செயல்பட்டு வந்த நிலையில், ஆகஸ்ட் 2024இல், உள்ளூராட்சித் தேர்தல்களைக் காலவரையின்றி தாமதப்படுத்துவது வாக்காளர்களின் உரிமைகளை மீறுவதாக இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன், விரைவில் தேர்தல்களை நடத்த இலங்கை தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டது.

இதேவேளை, நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுமார் 70,000 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில், சுமார் 10,000 வேட்பாளர்கள் மாத்திரமே நேரடி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டதாக ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவிக்கின்றார்.

நாட்டில் நடைபெற்ற கடந்தகால தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் மற்றும் வேட்பாளர்களின் ஆர்வம் குறைவாகக் காணப்பட்டதுடன், பிரசாரங்களும் மந்தகதியிலேயே இடம்பெற்றதாக அவர் கூறுகின்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மந்தமான நிலையில் காணப்பட்டமைக்கு பெருமளவான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையும் ஒரு காரணம் என தெரிவித்த அவர், இவை தொடர்பிலான சட்ட நடவடிக்கைகளை வேட்பாளர்கள் எதிர்கொண்டதால் பிரசாரங்கள் மந்த கதியிலேயே இடம்பெற்றதாக சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான தமது எதிர்பார்ப்புகள் இதுவரை காலமும் மிகக் குறைந்த அளவிலேயே நிறைவேறியுள்ளதாகக் கூறும் ச.ஹரிஹரன், திருகோணமலை உப்புவெளியை சேர்ந்த துடிப்பான இளைஞன் ஆவார். கிராமிய மட்ட அரசியலில் நிச்சயம் மாற்றம் வேண்டும் என்று கூறும் அவர், மக்கள் பிரதிநிதிகளற்ற சபையானது மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை என்பதால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அவசியம் என்கிறார்.

இதேவேளை, இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் அதிகமாக இருக்கும் அரச நிறுவனங்களில் உள்ளூராட்சி அதிகார சபைகள் நான்காவது இடத்தில் உள்ளமை இலங்கையின் ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றங்களில் ஊழல் மற்றும் முறைகேடுகளை எதிர்த்துப் போராடுவதற்கான புலனாய்வுப் பிரிவுகளை நிறுவுவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளமை இந்தக் கருத்துக்கு வலு சேர்ப்பதாக உள்ளது.

மே 15ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது மாகாண ஆளுநர்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி அனுமதி வழங்கியிருந்தார்.

கடந்த வருடத்தை விட மூன்று மடங்கு அதிகமாக இந்த வருடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அந்த நிதியை முறையாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றங்களை அதிகாரத்தின் மையமாகப் பார்க்கின்ற இன்றைய இளம் தலைமுறையினர், அரசியல் செல்வாக்கின் களமாகவும் அதனைக் குறிப்பிடுகின்றனர். பெரும்பாலும் உள்ளூராட்சி மன்றங்களின் செயல்திறன், ஊழல் மற்றும் அரசியல் கட்சிகளின் தலையீடு போன்றவற்றை விமர்சிக்கின்றனர். இருப்பினும், கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் உள்ளூராட்சி மன்றங்கள் மேலும் பங்காற்ற வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகவே மக்களுக்கு நெருக்கமான பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில், அபிவிருத்தி திட்டத்தில் நிதி கையாடல்கள் இடம்பெறுவதாகவே பலரும் குற்றச்சாட்டி வருவதுடன், கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு ஊழல்கள் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைகள் இதனை உறுதிப்படுத்தும் வகையிலே உள்ளன.

இலங்கையில் முன்னைய ஆட்சியாளர்கள் செய்த மோசடியும், ஊழலுமே நாட்டின இன்றைய நிலைக்குக் காரணமா என தெரிவித்து ‘அரகலய’ என்ற போராட்டத்தின் ஊடாக கொதித்தெழுந்த இளைய தலைமுறையினர், கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது இலஞ்சம், ஊழல், முறைகேடுகள் அற்ற ஒரு நாட்டை, அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தனர். அதன் காரணமாகவே இன்று பழம்பெரும் அரசியல்வாதிகள், முன்னாள் அரசியல்வாதிகளாக மாறியும் உள்ளனர். அதனைப் போலவே பாராளுமன்றமும் கறைபடியா கரங்களால் நிரப்பப்பட்டுள்ளதாகப் பார்க்கப்படுகின்றது.

“வரலாற்றில் முன்னேறிய நாகரீகமும், கலாசாரமும் நிறைந்திருந்த இலங்கை இன்றைய நிலையை அடைந்தமைக்கான காரணங்களைச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. அந்த காரணங்களில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்குப் பிராதான பங்குண்டு. சுதந்திரத்திற்குப் பின்னர் இலஞ்சம் மற்றும் ஊழலும் இலங்கைச் சமூகத்தில் மிகவும் பரவலாகி, சமூகத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படும் அளவிற்கு சர்வ சாதாரணமாகி விட்டது” என்கிறார் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்க.

மேலும், நேர்மைத்திறன், இலஞ்சம் மற்றும் ஊழலிற்கு எதிராக செயற்படல், வெளிப்படைத்தன்மை போன்ற விழுமியங்கள் ஒரு நபரின் சிறு பராயத்திலிருந்தே உருவாகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறானதொரு சந்ததியை உருவாக்குவது இலங்கையின் பொருளாதாரத்தில் ஊழலை துடைத்தழிக்கும் என உறுதியாக நம்புகின்றோம் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் பல புதிய முகங்கள், இளைஞர், யுவதிகள் போட்டியிட்டு அதில் வெற்றியும் பெற்றுள்ள நிலையில், நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் செயற்பட வேண்டும். அதிகாரம் கிடைக்கும் வரை மாற்றம் பற்றிப் பேசி விட்டு அதிகாரம் கிடைத்ததும் அதனை செய்யாது விட்டால், மாற்றத்துக்காக நம்பிக்கையுடன் வாக்களித்த மக்களும், நாட்டுக்கும் செய்யும் அநீதியாகவே இருக்கும்.


“அரசியல் என்பது சமூக மாற்றத்தின் கருவி; அதைத் தவறாகப் பயன்படுத்தினால், அது சமூகத்தை அழிக்கும் ஆயுதமாக மாறும்” என டாக்டர் அம்பேத்கர் கூறியதை இந்த இடத்தில் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இஸ்லாமாபாத்

வெளிநாடுகளுக்கு

# ‘அமைதிக் குழு’

## இந்தியா அறிவித்த நிலையில் பாகிஸ்தானும் ஏற்பாடு



பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்குவதற்காக முக்கிய நட்பு நாடுகளுக்கு 7 எம்.பி.க்கள் கொண்ட குழுக்களை இந்தியா அனுப்பவுள்ள நிலையில், பாகிஸ்தானும் அமைதிக்கான தனது தரப்பு நிலைப்பாட்டை விளக்கும் குழுவை உலக நாடுகளுக்கு அனுப்ப இருக்கிறது.

முன்னதாக, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் (பிபிபி) பிலாவல் பூட்டோ சர்தாரி, இந்தியா - பாகிஸ்தான் இடையே சமீபத்தில் உருவாகியிருக்கும் பதற்றங்களுக்கு மத்தியில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டை விளக்க ஒரு குழுவினை வழிநடத்துவதற்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெரிஃப் தன்னைக் கேட்டுக் கொண்டதாக தெரிவித்திருந்திருந்தார். அதனைத் தொடர்ந்து இந்த விஷயம் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து சர்தாரி தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்த பதிவில், “இன்று பிரதமர் ஷெபாஸ் ஷெரிஃப் என்னை அழைத்து அமைதிக்கான பாகிஸ்தான் தரப்பு முயற்சிகளை உலக அரங்கில் விளக்குவதற்கான குழுவினை வழிநடத்துமாறு என்னைக் கேட்டுக்கொண்டார். இந்த இக்கட்டான நேரத்தில் இந்த சவாலான பணியினை ஏற்றுக்கொள்வதையும், தேசத்துக்கு சேவையாற்றுவதையும் பெருமையாகக் கருதுகிறேன்” என்று தெரிவித்துள்ளார்.



சண்டிகர்

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த யூடியூபர்

அரியானா மாநிலத்தை சேர்ந்த பிரபல யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா. இவருக்கு யூடியூபில் 3 இலட்சத்து 77 ஆயிரம் பாலோவர்கள் உள்ளனர். இன்ஸ்டாகிராமிலும் அதிக பாலோவர்கள் உள்ளனர்.

இதனிடையே, யூடியூபர் ஜோதி மல்ஹோத்ரா கடந்த 2023ம் ஆண்டு பாகிஸ்தான் சென்றுள்ளார். அந்த பயணத்தின்போது பாகிஸ்தான் உளவு அமைப்புடன் ஜோதிக்குத் தொடர்பு ஏற்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றி வந்த இஷன் உர் ரஹ்மானுக்கும் ஜோதிக்கும் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்தியா வந்த மல்ஹோத்ரா, அரியானா, பஞ்சாப்பில் உள்ள இராணுவ நிலைகள் தொடர்பான விவரங்களை உளவுபார்த்து பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தானுக்கு உளவுபார்த்த மல்ஹோத்ராவை அரியானா பொலிஸார் சனிக்கிழமை கைது செய்துள்ளனர். அவரின் கூட்டாளிகள் 6 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

மகாராஷ்டிரா

கிரிப்டோ கரன்சி மோசடி: பேஸ்புக் நண்பரிடம்

# ரூ.79 இலட்சத்தை இழந்த பெண்



கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்வதாகக் கூறி 53 வயது பெண்ணிடம் ரூ.79 இலட்சத்தை மோசடி செய்த பேஸ்புக் நண்பரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள கோரேகானில் வசித்து வரும் 53 வயதான பெண்ணிடம் ஜூபர் ஷம்ஷாத் கான் என்பவர் பேஸ்புக் மூலம் அறிமுகமாகி நண்பரானார். அப்போது அந்த பெண்ணிடம் நெருங்கிப் பழகிய அவர், கிரிப்டோகரன்சி திட்டத்தில் முதலீடு செய்தால் அதிக வருவாய் ஈட்டலாம் என்று கூறி வந்துள்ளார்.

இதை நம்பிய அந்த பெண்ணும், ஒரு சிறுதொகையை முதலீடு செய்தார். அந்தத் தொகையின் மூலம் லாபம் கிடைத்ததாகக் கூறி அந்தத் தொகையை ஷம்ஷாத் கான் திருப்பிக் கொடுத்தார். இதனால் அந்த பெண்ணுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

மேலும், அதிக தொகையை முதலீடு செய்யலாம் என்று ஷம்ஷாத் கூறினார். இதனால் அதிக பணத்துக்கு ஆசைப்பட்ட அந்தப் பெண்ணும் அதிக தொகையை முதலீடு செய்தார்.

இந்நிலையில், முதலீடு செய்த தொகையிலிருந்து லாபம் வராததால் ஷம்ஷாத் கானை, அந்த பெண் அடிக்கடி தொந்தரவு செய்துள்ளார்.

மொத்தமாக ரூ.79 இலட்சத்தை முதலீடு செய்துள்ளேன். இதை உடனே திருப்பித் தரவேண்டும் என்று அந்த பெண் கேட்டுள்ளார்.

அதற்கு அந்த ஷம்ஷாத் கான், பணம் தராமல் ஏமாற்றி வந்துள்ளார். இதையடுத்து தான் ஏமாந்ததை உணர்ந்த அந்த பெண், நவி மும்பையில் உளள கார்கர் பொலிஸில் புகார் அளித்தார்.

வொஷிங்டன்:

அமெரிக்காவில் சூறாவளி

# 27 பேர் பலி

அமெரிக்காவின் மத்தியப் பகுதியில் திடீரென ஏற்பட்ட பாரிய சூறாவளியால் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூறாவளியின் தாக்கத்தால் கென்டக்கி, மிசோரி மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மிசோரி மாகாணத்தில் செயின்ட் லூாயிஸ் நகரில் மட்டும் 5 ஆயிரம் கட்டிடங்கள் சேதம் அடைந்தன. சூறாவளி தாக்கியதில் ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.

மரங்கள் முறிந்து விழுந்ததில் சாலையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் சேதம் அடைந்தன. பல இடங்களில் மின்சாரம் பாதிக்கப்பட்டது. மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட தடையால் 300,000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். இதனால் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது.





காசா

24 மணி நேரத்தில்

# காசாவில் 146 பேர் உயிரிழப்பு

காசாவில் இஸ்ரேலின் புதிய வான்வழி தாக்குதலில் 24 மணி நேரத்தில் சுமார் 146 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் சுமார் 1,200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தள்ளனர். சுமார் 250 இஸ்ரேலியர்களை பணய கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பினர் மீது போர் தொடுத்த இஸ்ரேல் காசாவில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளையில், பணய கைதிகளில் பலரை போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையிலும் இராணுவ நடவடிக்கை மூலமும் மீட்டுள்ளது.



இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க கிண்ணம்:

# பலஸிடம் வீழ்ந்த சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் கிறிஸ்டல் பலஸிடம் மன்செஸ்டர் சிற்றி வீழ்ந்தது.

வெம்ப்ளியில் சனிக்கிழமை (17) நடைபெற்ற இப்போட்டியில் எபெரெஷி எஸே பெற்ற கோலால் முதற்தடவையாக தொடரொன்றில் பலஸ் சம்பியனானது.





சாய்ந்தமருது கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில்

# லீடர் அஸ்ரப் வித்தியாலயம் பிரகாசிப்பு

நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றிய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவர் 16 முதலாமிடங்கள், 14 இரண்டாமிடங்கள், 18 மூன்றாமிடங்கள் அடங்கலாக மொத்தமாக 48 வெற்றியிடங்களைப் பெற்று பிரகாசித்துள்ளனர்.

பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீனின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் இணைப்பாடவிதான பொறுப்பதிபர் எம்.எப்.எம்.ஆர்.ஹாத்தீமின் தலைமையில் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம்.றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என். எம்.ஏ.ஆபாக்கின் அயராத பெரு முயற்சியால் மாணவர் இவ் வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் முதலாம், இரண்டாமிடங்களைப் பெற்றவர்கள் எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ள வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மைதானத்தை செப்பனிடும் பணி ஆரம்பம்


சாய்ந்தமருது வொலிவோரியன் பொது விளையாட்டு மைதானத்தை செப்பனிடும் இரண்டாம் கட்டப் பணி பாராளுமன்ற உறுப்பினரான அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் சனிக்கிழமை (18) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட செப்பனிடும் பணியில் பல கனரக இயந்திரங்களைக் கொண்டும் விளையாட்டுக் கழகங்களின் பங்களிப்புடனும் மைதானம் விளையாடுவதற்கு ஏற்ற வகையிலும் செப்பனிடப்பட்டு, அதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகளும் செவ்வனே இடம்பெற்றன.

செப்பனிடும் பணியானது ஆதம்பாவாவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மைதானத்தை செப்பனிடுவதற்கு இயந்திரங்களைத் தந்துதவிய கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு ஆதம்பாவா தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.






ஐ.பி.எல்:

# வெளியேற்றப்பட்ட நடப்புச் சம்பியன்கள்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை நடப்புச் சம்பியன்களான கொல்கத்தா நைட் றைடர்ஸ் இழந்தது.

பெங்களூருவில் சனிக்கிழமை (17) நடைபெறவிருந்த றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவுடனான போட்டியானது மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையிலேயே தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை நைட் றைடர்ஸ் இழந்தது.

இன்னும் ஒரு போட்டி மீதமுள்ள நிலையில் 12 புள்ளிகளை நைட் றைடர்ஸ் பெற்றுள்ள நிலையில், அதிகபட்சமாக அவ்வணி 14 புள்ளிகளையே பெற முடியுமென்ற நிலையில் ஏற்கெனவே மூன்று அணிகள் நைட் றைடர்ஸை விட அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளதுடன், மற்றைய அணிகளும் நைட் றைடர்ஸை விட அதிக புள்ளிகளைப் பெறக்கூடிய வகையில் உள்ளது.

இந்நிலையில், லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 19, மே 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.